பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

30 06 2026 6 45

செவ்வாய்க்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. பெட்ரோல், டீசல் விற்பனை மீது விதிக்கப்பட்ட தற்காலிக கட்டுப்பாடுகளை மத்திய அரசு திரும்பப் பெற்றுள்ளது.

2. வளமையான தமிழகத்தை உருவாக்குவதற்கு நீடித்த பொருளாதார வளர்ச்சி, புதுமைக் கண்டுபிடிப்பு ஆகியவற்றின் அவசியம் குறித்து ஆளுநர் திரு. ராஜேந்திர விஷ்வநாத் அர்லேகர் வலியுறுத்தியுள்ளார்.

3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குரூப்-1 பணியிடங்களுக்கான தேர்வுக்கு இன்று முதல் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

4. சென்னையில் தினசரி பால் விநியோகம் குறைந்துள்ளதாக வெளியான செய்திகள் தவறானது என்று ஆவின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

5. தமிழகத்தில் கோயம்புத்தூர், நீலகரி உள்ளிட்ட 6 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பெட்ரோல், டீசல் விற்பனை மீது விதிக்கப்பட்ட தற்காலிக கட்டுப்பாடுகளை மத்திய அரசு திரும்பப் பெற்றுள்ளது.

சில்லரை விற்பனை நிலையங்களில் ஒரு வாகனத்திற்கு நாள் ஒன்றுக்கு அதிகபட்சம் **200** லிட்டர் **Hi Speed Diesel** மட்டுமே வழங்கப்படும் என்ற உச்சவரம்பு கடந்த **12**ஆம் தேதி நிர்ணயிக்கப்பட்டது.

மேலும் தொழில்துறை நிறுவனங்கள், வணிக நுகர்வோர் ஆகியோர் சில்லரை விற்பனை நிலையங்களுக்கு பதிலாக தனியே அமைக்கப்பட்ட

நுகர்வோர் பம்புகள் மூலம் எரிபொருளை பெற அறிவுறுத்தப்பட்டது.

சில்லரை நுகர்வோருக்கு பெட்ரோல், டீசல் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்யும் வகையிலும், கள்ளச்சந்தையில் டீசலை விற்பனை செய்வதையும், பதுக்குவதையும் தடுப்பதற்கான நடவடிக்கையாகவும் இது மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் நாட்டில் பெட்ரோலியப் பொருட்களின் விநியோக சூழலை ஆய்வு செய்த நிலையில் இந்த தற்காலிக கட்டுப்பாடு தேவையில்லை என்று அரசு முடிவு செய்துள்ளது.

இதையடுத்து இந்த கட்டுப்பாடுகள் நாளை முதல் திரும்பப் பெறப்படுவதாக பெட்ரோலிய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நாடு முழுவதும் உள்ள பெட்ரோல் நிலையங்களில் எத்தனால் கலந்த பொட்ரோலைப் பயன்படுத்துவது குறித்து வாடிக்கையாளர்களை எச்சரிக்கும் விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் பரவி வரும் தகவல்கள் தவறானது என்று மத்திய அரசு கூறியுள்ளது.

இதுகுறித்து பத்திரிகை தகவல் அலுவலகத்தின் உண்மை கண்டறியும் குழு வெளியிட்டுள்ள செய்தியில், 20 சதவீதம் எத்தனால் கலக்கப்பட்ட பெட்ரோல் இந்திய தர நிர்ணய அமைப்பு நிர்ணயித்துள்ள தரத்தைக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

எத்தனால் கலக்கப்பட்ட பெட்ரோல் அறிமுகப்படுத்தப்பட்டது முதல் வாகன எந்திரக் கோளாறு அல்லது வாகனப் பழுதுபார்ப்பு சூழல் ஏதும் ஏற்படவில்லை என்று கூறியுள்ளது.

இந்த வகை பெட்ரோல் பயன்பாட்டிற்கு முன்பாக கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுகிறது என்று மத்திய அரசு கூறியுள்ளதாக பத்திரிகை தகவல் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

<<<<>>>>

வளமையான தமிழகத்தை உருவாக்குவதில் நீடித்த பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு உருவாக்கம், புதுமைக் கண்டுபிடிப்பு ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து ஆளுநர் திரு. ராஜேந்திர விஷ்வநாத் அர்லேகர் வலியுறுத்தியுள்ளார்.

சென்னை மக்கள் மாளிகையில் 2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கி தமிழ்நாட்டின் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம் என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் உரையாற்றினார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற தொலைநோக்கை அடைவதில் தமிழகத்தின் பங்களிப்பு குறித்து அவர் எடுத்துரைத்தார்.

அத்துடன் அரசு, தொழில்துறை, கல்வி நிறுவனங்கள், சமூக அமைப்புகள் ஆகியவை இணைந்து செயல்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் ஆளுநர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

சென்னையில் தினசரி பால் விநியோகம் குறைந்துள்ளதாக வெளியான செய்திகள் தவறானது என்று ஆவின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், சென்னையில் நாள்தோறும் சுமார் பதினொன்கரை லட்சம் லிட்டர் பால் நுகர்வோருக்கு விநியோகிக்கப்படுவதாக கூறியுள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் நாளொன்றுக்கு 14 புள்ளி நான்கு ஆறு லட்சம் லிட்டர் பால் விநியோகம் செய்திருந்த நிலையில், நடப்பாண்டு ஜூன் மாதத்தில் நாளொன்றுக்கு 14 புள்ளி எட்டு இரண்டு லட்சம் லிட்டர் பால் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தைவிட 36 ஆயிரம் லிட்டர் பால் அதிகம் என்று கூறியுள்ளது.

எனவே பால் விநியோகம் குறைந்துள்ளதாக வெளியான தகவலை பொதுமக்கள் நம்ப வேண்டாம் என்று ஆவின் நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

அரசுக் கல்லூரி உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கான தகுதித் தேர்வு முடிவுகள் குறித்து தொடர்ந்து புகார்கள் வருவது தேர்வில் மிகப்பெரும் முறைகேடு நடைபெற்றிருக்கக் கூடும் என்ற

சந்தேகத்தை எழுப்புவதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், பல்லாயிரக்கணக்கான தேர்வர்கள் மற்றும் லட்சக்கணக்கான அரசு கல்லூரி மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு உடனடியாக விசாரணை நடத்தி தேர்வு முடிவுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குரூப்-1 பணியிடங்களுக்கான தேர்வுக்கு இன்று முதல் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பத்தை www.tnpscexams.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் அடுத்த மாதம் 29ஆம் தேதி என்றும், விண்ணப்பத்தில் திருத்தங்களை ஆகஸ்ட் 2ஆம் தேதி முதல் 4ஆம் தேதி வரை மேற்கொள்ளலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதற்கான முதல் நிலைத் தேர்வு செப்டம்பர் மாதம் 6ஆம் தேதி நடைபெறும் என்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சேலம் மண்டல கலைப் பண்பாட்டுத் துறை சார்பில் ஓவியம் மற்றும் சிற்பக் கலைக் கண்காட்சி நடைபெற்றது.

தமிழர் வாழ்வியலை காட்சிபடுத்தும் வகையில் இந்தக் கண்காட்சி அமைந்திருந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Vijayakumar — 48 Sec)**

<<<<>>>>

தமிழகத்தில் கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி, திண்டுக்கல், ஈரோடு, தேனி மாவட்டங்களின் ஒரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

டெல்டா மாவட்டங்கள், வட தமிழகத்தின் ஒரிரு இடங்களிலும் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

***இருவரிச் செய்திகள்***

ஹோர்முஸ் நீரிணை விவகாரத்திற்கு தீர்வு காணும் வகையில் அமெரிக்கா - ஈரான் இடையேயான பேச்சுகள் இன்று தோஹாவில் நடைபெற உள்ளது.

--------------

ஆஃப்கனிஸ்தான் மீது பாகிஸ்தான் நடத்திய வான்வெளி தாக்குதலுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

--------------

சீன ராணுவம் அருணாச்சலப்பிரதேசத்தில் ஊடுருவி முகாம்களை அமைத்ததாக வெளியான செய்தி தவறானது என்று இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

--------------

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஆந்திர மாநிலத்தில் இன்று முதல் இரண்டு நாள் பயணம் மேற்கொள்கிறார்.

--------------

தமிழக அரசின் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பேக்கரி பொருட்கள் தயாரித்தல் பயிற்சி, ஈக்காட்டுத் தாங்கலில் உள்ள சிட்கோ தொழிற்பேட்டையில் அடுத்த மாதம் 6ஆம் தேதி முதல் 3 நாட்கள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

--------------

தருமபுரியில் வேளாண்துறை சார்பில் உரங்களின் தரம் குறித்த விற்பனையாளர்களுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது.

--------------

தூத்துக்குடி அருகே நடுக்கடலில் பழுது ஏற்பட்டு சரக்கு கப்பலுக்குள் தண்ணீர் புகுந்த நிலையில், கடலோர காவல்படையினர் உடனடியாக பழுதை சரி செய்து, பலகோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்களை மீட்டனர்.

--------------

சேலத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

--------------

அரியலூர் மாவட்டம் கீழப்பழுவூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் மேற்கொண்ட சோதனையில் கணக்கில் வராத 41 ஆயிரம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.

--------------

திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தில் ஆனிமாத பௌர்ணமியை ஒட்டி லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் சென்று வழிபட்டனர்.

--------------

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டம் இன்று நடைபெற உள்ளதாக ஆட்சியர் திருமதி சினேகா தெரிவித்துள்ளார்.

--------------

சென்னையில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 94 முக்கிய சாலை சந்திப்பு வளைவுகள் மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருவதாக பெருநகர் சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

--------------

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் பிரேசில் அணியும், பராகுவே அணியும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

அமெரிக்காவின் ஹூஸ்டனில் நடைபெற்ற போட்டியில் பிரேசில் 2-1 என்ற கோல் கணக்கில் ஜப்பானை வென்றது.

பாஸ்டனில் நடைபெற்ற ஆட்டத்தில் பராகுவே பெனால்டி ஷூட்அவுட் முறையில் **4-3** என்ற கோல் கணக்கில் ஜெர்மனியை வென்றது.

---------------

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் தக்ஷினேஷ்வர் சுரேஷ் பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<The End>>>>**